# <u>செயற்குழுக் கூட்டம் (23-09-2023)</u>

இன்று (23 செப்டம்பர் 2023) நமது இயக்கத் துணைத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், பொது செயலாளரும், ஆறு செயற்குழு உறுப்பினர்களும், ஆறு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட ஆலோசகரும் கலந்து கொண்டார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஆகஸ்டு மாத வரவு செலவு கணக்கு நிதிச் செயலாளரால் வாசிக்கப்பட்டது . வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. அனைத்து மவட்டங்கள் மற்றும் கிளைகள் சென்ற ஆண்டு (2022-23)க்குரிய வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்படவில்ல. அனைத்து வரவு செலவு கணக்குகளை அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் தலைமையகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3, உறுப்பினர் சேர்க்கையின் போது மாவட்டங்கள் / கிளைகள் புதிய உறுப்பினர் கட்டணத்தை முழுமையாக தலைமையகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்டங்கள் / கிளைகளுக்கு உரிய பணம் அந்தந்த மாவட்டங்கள் / கிளைகளுக்கு திரும்ப **NEFT** மூலம் அனுப்பி வைக்கப்படும்.

4. நிலுவையிலுள்ள நீதிமண்ற வழக்குகளின் தற்போதைய நிலை பற்றி விளக்கப்பட்டது. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்கும் நமது செயலாளர் (சட்டம்) திரு A நஃபீஸ் அஹமத் அவர்களை விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. அதே போன்று கரூர் மவட்ட நெடுஞ்சாலைத் துறை ஊழல்,, தார்விலை வீழ்ச்சியில் ஊழல், மாவட்டக்கல்வி அதிகாரி மீதான ஊழல் புகார் ஆகியவை பற்றி யும் விவாதிக்கப்பட்டது

5. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட 9 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

<u>ஆயுள் உறுப்பினர்கள்</u>

1. **திரு C . பரமசிவம்**
2. **டாக்டர் திரு --பிரவின் குமார்**

<u>ஆண்டு உறுப்பினர்கள்</u>

**1 திரு A. முக்தர் அஹமது**
**2 திருமதி K ஜெயந்தி**
**3. திரு T. நாராயணன்**
**4. திரு பெருமாள் கருப்பன்**
**5. திருமதி K. சுடர்க்கொடி**
**6. திருமதி அங்கையர்க்கன்னி**
**7. திரு J. மஹேஷ்வர்**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்கள்.

6. நமது இயக்கத்தின் சில உறுப்பினர்கள் நமது இயக்கத்தைப் பற்றி தரக்குறைவாக பேசுவதாக செய்திகள் வந்துள்ளன. நமது உறுபினர்களும், அலுவலக ஊழியர்களும் நடத்தை விதிகளை மீறி ஏதும் பேசக்கூடாது. நல்ல உறுப்பினர்களாகவும் , நல்ல முன்னுதாரங்களும் கொண்டு விளங்க வேண்டும். தன்னால் இயன்ற செயல்கள் செய்து இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும். இல்லையேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

7. நமது இயக்க ஆரம்ப நிறுவனர் திரு – குப்புராஜ் அவர்களின் நூறாவது நினைவு தினம் டிசம்பர் 9ம் தேதி வருகிறது. அதைக் கொண்டாட அன்று மாலை நான்கு மணியளவில் மைலாப்புரிலுள்ள நியூ உட்லாண்ட்ஸ் ஹோட்டலில் அவரது மகள் திருமதி ஜெயந்தி ஆனந்தன் அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள். அதில் கலந்து கொள்ள விருப்பப் படுகிறவர்கள் நமது சட்டச் செயலாளர் திரு நஃபீஸ் அஹமத்திடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| வே அய்யப்பன் | **வே கார்த்திகை ராஜன்** |
| **துணத் தலைவர்** | **பொது செயலாளர்** |